வாரிய முதன்மைச் செயல் அலுவலருக்குத் தெரிவிக்கப்பட்டு, இந்நிலத்தில் பணிமனை அமைக்க ஒப்படைப்பு செய்யும்படியும் கோரப்பட்டுள்ளது. நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்டவுடன் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று பணிமனை அமைக்கும் பணி விரைவில் துவக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

விமான வசதிகள்

***1808—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலிருந்து ஹஜ் செல்வோர் வசதிக்காக மதுரையிலிருந்து விமானங்கள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறைவன் அருளால் மிக, மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்து, ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியரின் மகனாக வளர்ந்து, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அருளால் இராணிப்பேட்டை நகரின் வட்டச் செயலாளராகவும், நகரச் செயலாளராகவும், வேலூர் கிழக்கு மாவட்ட சிறுபான்மையினர் நலப் பிரிவின் செயலாளராகவும் ஆகி, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டு, இன்று இராணிப்பேட்டை தொகுதியின் வேட்பாளராகியுள்ளேன். கடுமையான கோடை வெயிலிலும் எனக்காக பிரச்சாரம் செய்து, உதவி செய்து, என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி, மாண்புமிகு அம்மா அவர்களின்

2011 ஆகஸ்ட் 16]

மந்திரிசபையில் அமைச்சராகவும் பொறுப்பினை அளித்து, பெருமைவாய்ந்த இந்தச் சட்டமன்றத்தில் இன்று பதிலளிக்கக்கூடிய வகையில் மாபெரும் வாய்ப்பினை அளித்த எங்கள் உயிருக்கு நிகரான மாண்புமிகு தமிழக முதல்வரும் (மேசையைத் தட்டும் ஒலி), கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளரும், சமூக நீதி காத்த வீராங்கனையும், சிறுபான்மை மக்களின் ஒப்பற்ற காவலராகவும், மனித நேயமிக்க மாணிக்கத் தலைவியாகவும் விளங்கும் எங்கள் அன்புக்குரிய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, சங்கக் காலத்திலிருந்து இன்றுவரை எழினி, ஆய், நள்ளி, பாரி, ஓரி, பேகன், மலையன் என்ற கடையேழு வள்ளல்களும், எட்டாவது வள்ளலாக நமது டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும், எட்டு வள்ளல்கள் இருந்தாலும் சங்க காலத்திலிருந்து இன்றுவரை நாம் கண்ட பெண் வழியில் வந்த ஒரே கொடை வள்ளல் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–05

சிறுபான்மை மக்களின் காவலர்கள் என்று சொல்லிக்கொண்டு, சிறுபான்மை மக்களை ஏமாற்றி, சிறுபான்மை மக்களுக்கு மாபெரும் துரோகங்களை இழைத்து, அவர்களுடைய சொத்துகளை அபகரித்து, சமச்சீர் கல்வி கொண்டுவருகிறோம் என்று சொல்லி, சிறுபான்மை மொழிகளான உருது, தெலுங்கு மற்றும் மலையாளம் போன்ற மொழிகளுக்கு சமாதி கட்டிவிட்ட அந்த மைனாரிட்டி தி.மு.க. அரசுக்கு மத்தியில், சிறுபான்மை மக்களின் பாதுகாவலராக விளங்கிக்கொண்டு, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல வாரியம் அளித்த பரிந்துரையை ஏற்று, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு தற்போது அளிக்கப்பட்டுவரும் 50 விழுக்காடு இட ஒதுக்கீட்டைக் காக்கும் வகையில், 11–7–2011 அன்று, வரலாற்றில் முக்கியமாக இடம்பெறும் வகையில் அரசாணை வெளியிட்டு, தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கு 30 விழுக்காடும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 20 விழுக்காடும், ஆதி திராவிடர்களுக்கு 18 விழுக்காடும் மற்றும் பழங்குடியினருக்கு 1 விழுக்காடும் ஆக மொத்தம் 69 விழுக்காடு இட ஒதுக்கீடு தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுவதுடன், வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல், இட ஒதுக்கீடு கடைப்பிடிக்கப்பட,

அரசாணைமூலம் உத்தரவு பிறப்பித்து, அதன்மூலம் சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு அம்மா அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) Prevention of Communal and Targeted Violence (Access to Justice and Reparations) Bill 2011 மூலம் மத்திய அரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 356 ஆவது பிரிவினைப் பயன்படுத்தி, மாநில அரசுகளை முடக்க வழிவகை செய்யும் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர முயற்சித்தபோது, அதனைப் படித்த எங்களைப் போன்றவர்களுடைய இரத்தமே கொதித்தெழுந்தது. அந்தச் சட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு வந்தபோது, அதனை எதிர்த்து, நிராகரித்து குரல்கொடுத்த முதல் முதல்வர், ஏன், அகில இந்தியாவிலேயே ஒரே முதல்வர், எங்களுடைய அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு நிருவாக மானியமாக ரூபாய் 45 இலட்சத்திலிருந்து ரூபாய் 100 இலட்சமாகவும், பணி ஓய்வு பெற்றவர்களுக்கு அவர்களுடைய ஓய்வூதியப் பயன்களுக்காக 3 கோடி ரூபாய் மானியமாகவும், உலமாக்கள் பென்ஷனை ரூபாய் ஆயிரமாகவும் உயர்த்தியதுடன், தமிழ்நாடு ஹஜ் குழுவிற்கு நிர்வாக மானியத்தை 10 இலட்சம் ரூபாயிலிருந்து 20 இலட்சமாக உயர்த்திக் கொடுத்த எங்களுடைய அன்பிற்குரிய அன்னை கொடை வள்ளல் அம்மா அவர்களுக்கு மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இராணிப்பேட்டை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்த கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை மிகுந்த பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு விடை, அதாவது ஹஜ் பயணிகளுக்காக மதுரையிலிருந்து விமானங்கள் இயக்கப்பட வேண்டுமென்றால், மதுரை விமான நிலையம், சர்வதேச விமான நிலையமாகச் செயல்படவேண்டும். புறப்பாட்டுத் தளத்தில் சுங்கப் பரிசோதனை, குடியேற்றம் முதலான சோதனைகளை மேற்கொள்ள வசதிகள் இருக்கவேண்டும். ஆனால், மதுரை விமான நிலையம், சர்வதேச விமான நிலையமாக இயங்கவில்லை. மேலும், சர்வதேசப் பயணத்தினைக் கையாளுவதற்கான வசதிகளும் மதுரை விமான நிலையத்தில் தற்போது இல்லை.

2011 ஆகஸ்ட் 16]

ஆகவே, மதுரை உள்ளிட்ட தென்பகுதியிலுள்ள 9 மாவட்டங்களைச் சேர்ந்த 813 ஹஜ் பயணிகளுக்காக மதுரையிலிருந்து தனியாக விமானம் இயக்குவது சாத்தியமானதாக இல்லை. ஆனாலும், இது தொடர்பாக மைய அரசுதான் முடிவு செய்யவேண்டும்.

இது தவிர, புனிதப் பயணம் புறப்படுமுன், தங்குவதற்காக சென்னையில் "ஹஜ் ஹவுஸ்" எனப்படும் இல்லத்தில் போதிய தங்குமிட வசதி உள்ளது. அத்தகைய வசதி ஏதும் மதுரையில் இல்லை; இதனால் தனியாக விமானம் இயக்குவதற்கான சாத்தியக்கூறு மதுரையில் இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மாநிலங்களிலே இரண்டு, மூன்று முனையங்களிலிருந்து ஹஜ் பயணிகள் செல்கிறார்கள். நம்முடைய பக்கத்து மாநிலமான கேரளா, நம்மைவிட நிலப் பரப்பிலே சிறிய மாநிலமாக இருந்தபோதிலும், கொச்சியிலிருந்தும், கோழிக்கோட்டிலிருந்தும் விமானங்கள் ஜெட்டாவிற்கு ஹஜ் பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்கின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், சென்னையிலிருந்து செல்லக்கூடிய ஹஜ் பயணிகளில் பாதிப் பேர் தென்மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி இதுபோன்ற மாவட்டங்களிலிருந்துதான் சென்னைக்கு வந்து செல்லவேண்டிய ஒரு நிலை. அவர்கள் சென்னைக்கு. . .*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, துணை வினாவைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *சென்னைக்கு வந்து செல்வதற்கு இரண்டு, மூன்று நாட்கள் அதிகமாக ஆகக்கூடிய நிலையிலே, மதுரையிலே இந்த வசதி செய்யப்பட்டால் அவர்கள்*

சில மணி நேரங்களிலேயே மதுரைக்கு வந்து அந்த formalities–ஐ முடித்துவிட்டுச் செல்லக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. மதுரை விமான நிலையத்துக்கு சர்வதேச விமான நிலைய அந்தஸ்து கொடுப்பதற்காக, பத்திரிகைச் செய்திகளின்படி customs clearance எல்லாம் முடிந்து விட்டது. இந்த ஆட்சியிலே, நடைபெறக்கூடிய இந்த மக்கள் நல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, தமிழக அரசு முன்முயற்சி எடுத்து மதுரையிலிருந்தும் ஹஜ் பயணம் புறப்படுவதற்கு ஏற்பாடு செய்தால் அது மிகப் பெரிய ஒரு வரலாற்றுச் சாதனையாக, சிறுபான்மை மக்களுக்கு நீண்ட காலமாகச் செய்யக்கூடிய ஒரு பெரும் சேவையாக அமையும். தமிழக அரசு அதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹஜ் பயணம் மேற்கொள்ளும் மொத்த பயணிகள், 3,048 பேர். அதில் மதுரை போன்ற 9 தென் மாவட்டங்களிலிருந்து செல்கின்ற பயணிகளின் எண்ணிக்கை 813 பேர்தான். ஒரு விமானத்திற்கு 450 பேர் வீதம் சென்றாலும் இரண்டு விமானங்கள்தான் செயல்படமுடியும். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று, அண்டை மாநிலமான கேரளாவிற்கு மைய அரசின் ஒதுக்கீட்டின்படி ஹஜ் பயணிகளின் எண்ணிக்கை 6,900 ஆகும். ஆனால், அங்கு கோழிக்கோடு, கொச்சி, திருவனந்தபுரம் ஆகிய மூன்று இடங்களில் சர்வதேச விமான நிலையங்கள் செயல்பட்டாலும், ஹஜ் விமானங்கள் கோழிக்கோடு சர்வதேச விமான நிலையத்திலிருந்து மட்டுமே இயக்கப்படுகின்றன. கொச்சியிலிருந்து இயக்கப்படவில்லை. கோழிக்கோடிலிருந்து மட்டும்தான் இயக்கப்படுகின்றன. கர்நாடகா மாநிலத்திலும் ஹஜ் பயணிகளின் ஒதுக்கீடு சுமார் 5,677 பேராக இருந்தாலும், பெங்களூருவிலிருந்து மட்டுமே விமானங்கள் இயக்கப்படுகின்றன. ஆந்திர மாநிலத்தில் ஹஜ் பயணிகளின் ஒதுக்கீடு, 2011–ல் சுமார் 6,137 ஆக இருந்தாலும், ஹைதராபாத்திலிருந்து மட்டுமே ஹஜ் விமானங்கள் இயக்கப்படுகின்றன. எனவே, தமிழகத்திலிருந்து ஹஜ் பயணம் மேற்கொள்வதற்கு அனைத்து வசதிகளும் சென்னையிலேயே சிறப்பாக

2011 ஆகஸ்ட் 16]

அளிக்கப்பட்டு வருவதால் மதுரையிலிருந்து விமானங்களை இயக்குவதற்குத் தற்போது சாத்தியம் இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த முறை ஹஜ் பயணிகளுக்காக மேலும் இரண்டாயிரம் இடங்கள் அதிகமாக ஒதுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி இரண்டு கடிதங்களை எழுதியுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)* Time *ஆகிவிட்டது.* Demand*–க்குப் போக வேண்டும்.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அறிவிப்புகள்

(அ) பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) இன்றைக்கு* Agenda*–படி போக வேண்டும். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 4–8–2011 ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க 23–8–2011 மற்றும் 24–8–2011 ஆகிய நாட்களில் விவாதம் மற்றும் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகியன 24–8–2011 அன்று விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும். 5–9–2011 அன்று எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் 14–9–2011 அன்று எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை மற்றும் மானியக்*